1974 மார்ச 15]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தமிழ் அரசிலே முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே ஆற்றிய உரைகள் எல்லாம் அச்சிடப்பட்டு பிரசுரம் செய்யப்படுகின்றன. அந்த உரைகள் எல்லாம் ஏற்கனவே சட்டமன்ற நடவடிக்கை புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வருகின்றன. ஆக, தமிழ் அரசிலும் அதை பிரசுரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? எதிர்க்கட்சித் தலைவர்களுடைய உரைகளையும் அதிலே பிரசுரிக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்க்கட்சியினர் இந்த அவையிலே எழுப்புகின்ற சந்தேகங்கள், கோருகின்ற விளக்கங்கள் இவைகளுக்குப் பதிலாக முதலமைச்சர் உரை அமைந்திருக்கின்ற காரணத்தினால் எதிர்க்கட்சியினர் உரையும் அதிலே கலந்திருக்கிறது. ஆகவே தனியாக அச்சிடப்பட வேண்டிய அவசியமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ் அரசு பிரதிகள் தனியார்கள் மூலம் விற்பனைக்குக் கொடுக்கப்படுகின்றனவா? அதன்மூலம் எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். தனியார் துறையிடம் தரப்படுகிறது. அதன் மூலமாகக் கிடைத்த ரூபாய் சுமார் 22 லட்சத்து 60 ஆயிரத்து 475 ரூபாய் 20 காசுகள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Journal 'Tamil Arasu' is attractive and its get-up is good and it contains also very good articles and people are able to understand the Government's schemes. Since there are a large number of Telugu speaking people in this State, may I know whether the Government will be pleased to publish it in Telugu or include Telugu articles in the Tamil Journal?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை ஆராயலாம்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*436 வினா.—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் 3-வது வார்டு அரிசனங்களுக்கு, மடப்புறம் உயர்நிலைப்பள்ளிக்கு அருகில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ரூபாய் 4,590·70.

திரு. த. சோணபா : தலைவர் அவர்களே, இந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பட்டாக்களை வழங்கப்படுவதற்கான விழாவும் நடைபெற்று விட்டது. ஆனால் அந்த இடத்திற்குள் அரிசன மக்கள் சென்று வீடு கட்டிக்கொள்ளுவதற்கு நுழைய முடியவில்லை. காரணம் நிலச்சொந்தக் காரர்களுக்குப் பணம் போய்ச் சேரவில்லை என்று ஆட்சேபிக்கிறார்கள். அதிலே என்ன தகராறு என்பதை அரசு தெரிந்து அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நிலச் சொந்தக்காரர்கள் நிலம் கொடுக்க மறுத்தார்கள். அவர்களுக்கு 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சொத்து இருப்பதால் அவர்களுடைய மறுப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்த நிலத்தை எடுத்து அரிசன மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே வாரியம் உத்திரவிட்டிருக்கிறது. ஆனால் பணம் இன்னும் கொடுக்கவில்லை. பணம் கொடுத்தபிறகுதான் பட்டா செய்யமுடியும். பணம் கொடுத்தபிறகு பட்டா செய்துகொடுக்கப்பட்டு அது அந்த மக்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எ ஆர். மாரிமுத்து: அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்காக மனைகள் வழங்குவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு—நிலங்களை ஆர்ஜிதம் செய்வது அரிசன நலத் துறையாக இருந்தாலும்கூட, மனைக் கட்டு வழங்குகின்ற அதிகாரிகளிடம் கொடுத்து விநியோகம் செய்ய சொல்வதாலே அவர்கள் 2 செண்ட்டுக்கு மேல் கொடுக்க மறுக்கிறார்கள், இரண்டு செண்ட்டுகள் தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அரிசன நலத் துறையினரே கொடுத்தால் 3 செண்ட்டுகள் கொடுக்கலாம். அரிசன நலத் துறையினரே ஆர்ஜிதம் செய்கின்ற மனைக்கட்டுக்களை அவர்களே விநியோகிக்கச் செய்யக்கூடிய முறையைக் கொண்டுவருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நலத் துறையின் மூலமாக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆனால் ரெவின்யூ இலாகாவினால்தான் இது செய்யப்படுகிறது. நலத் துறையானது எத்தனை ஏக்கர்கள், எந்த இடத்திலே, எவ்வளவு பேர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்படுகிறது என்ற கணக்குகளை வைத்துக்கொண்டிருக்கிறது. மிக அதிகமாகப் பணம் கொடுத்து எடுத்து இருந்தால் அங்கே இரண்டு செண்ட்டுகள்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் குறைந்த பணம் கொடுத்து எடுத்திருந்தால் 3 செண்ட்டுகள் கொடுக்கப்படுகிறது, சில இடங்களிலே 5 செண்ட்டுகள் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே எடுக்கப்படுகின்ற இடத்தின் விஸ்தீரணத்தைப் பொறுத்தும், மக்கள் இருக்கின்ற எண்ணிக்கையைப் பொறுத்தும் கொடுக்கின்ற விலையைப் பொறுத்தும் 2 செண்ட்டுகள், 3 செண்ட்டுகள், 5 செண்ட்டுகள் என்று இந்த இலாகாவிலிருந்து நிர்ணயித்து கொடுக்கப்படுகிறது.

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்பது அரிசன நலத் துறையிலே ஒவ்வொரு அரிசனனுக்கும் 3 செண்ட்டு என்று கொடுக்கிறபோது இப்பொழுது நிலம் இல்லாத

1974 மார்ச் 15]

ஏழைகளுக்கு எல்லாம் நிலம் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அரிசன நலத் துறையின் மூலமாக ஆர்ஜிதம் செய்யப்படுகிற நிலங்கள் எல்லாவற்றையும் வேறு ஒரு துறையினிடத்திலே கொடுத்தால் அவர்கள் 2 செண்ட்டுகள்தான் கொடுக்கிறார்கள், அக்வயர் பண்ணிய நிலமே மீதம் ஆகிவிடுகிறது என்ற நிலைமை இருப்பதால் அரிசன நல இலாகாவினாலேயே அக்வயர் செய்த நிலத்தை விநியோகிக்கின்ற பொறுப்பையும் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மூன்று செண்ட்டு கொடுக்கிறோம் சில இடங்களிலே , சில நேரங்களிலே அவர்கள் இந்த இடத்திலேயேதான் கொடுக்கப் படவேண்டுமென்று குறிப்பிட்ட இடத்தையே கேட்கிறார்கள் ஆனால் அந்த இடம் நஞ்சை நிலமாக இருக்கும் அல்லது அதிக விலையுள்ளதாக இருக்கும் அல்லது குறைந்த விஸ்தீரணம் உள்ளதாக இருக்கும். நானே சில இடங்களிலே 2 செண்ட்டுதான் கொடுக்கமுடியும் என்று உத்திரவிட்டிருக்கிறேன். காரணம் அந்த இடத்திலே இருக்கக்கூடிய விஸ்தீரணம், அதிக விலை அதிகமான மக்கள் எண்ணிக்கை இவற்றைப் பொறுத்து 2 செண்ட்தான் கொடுக்கமுடிகிறது. ஆனால் முறையாகக் கொடுப்பது 3 செண்ட்டு செண்ட்கூட கொடுக்கப்படுகிறது.

*437. வினா : திரு. என். இராஜாங்கம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கடலூர் வட்டத்தில், கண்ணாடி, கன்னியங்குப்பம், குண்டியமல்லூர், பூவாணிக்குப்பம், பொட்டவெளி, தானஞ்சேரி, குப்பம்-குறிஞ்சிப்பாடி, அகரம் காலனி, தங்கனிக்குப்பம் (வடக்கு), ஆயிக்குப்பம் ஆகிய கிராமங்களுக்கு (அரிசனங்களுக்கு) மனைப்பட்டா வழங்க 1961-ம் ஆண்டு நடவடிக்கைகள் மேற்கொண்டும் இன்றுவரை மனைகள் வழங்கப்படவில்லை என்பதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கண்ணாடி, பொட்டவெளி, குண்டியமல்லூர், குப்பம்-குறிஞ்சிப்பாடி, பூவாணிக்குப்பம், அகரம், தங்கவிக்குப்பம், ஆயிக்குப்பம்—

இக்கிராமங்களின் அரிசனங்களுக்கு வீட்டுமனைக்காக நில ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியரிடமிருந்து பிரிவு 4 (1) முன்மொழிவுகள் ஏதும் வரவில்லை. முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கண்ணியங்குப்பம் : இக்கிராமத்தில் நில ஆர்ஜிதத்திற்கான உறுதிமொழி விளம்பரம் வெளியிடப்பட்டு தீர்ப்பு விசாரணை நடத்தப்பட்டது. விரைவில் நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு பட்டாக்கள் வழங்கப்படும்.

தானஞ்சேரி : இக்கிராமத்தில் நில ஆர்ஜிதத்திற்கான பிரிவு 4 (1) கீழ் முன்மொழிவு அறிக்கை வெளியிடப்பட்டு விட்டது. மேல் நடவடிக்கை தொடரப்படும்.